விலை: சதம் 75 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 கார்த்திகை 20 ஸபர் 6 இதழ் 293
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 5-12-81

## சுதந்திரக் கட்சியை ஐக்கியப்படுத்தும் பின்னணியில் தமிழ் அரசியல் பிரமுகர்

(நமது நிருபர் திரு. எஸ், மகாலிங்கசிவம்)

**பிளவுபட்ட சிறிலங்கா சுதந்திர கட்சியை ஐக்கியப்படுத்துவதில் இப்பொழுது முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் தமிழ் அரசியல் பிரமுகர் ஒருவர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.**

திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி இரண்டு குழுக்களாகப் பிளவுபட்டதும், ஒரு குழுவுக்கு திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் மற்றைய குழுவுக்கு திரு மைத்திரிபால சேன நாயக்காவும் தலைமை வகிப்பதும், திரு. அனுரா பண்டார நாயக்கா, திரு மைத்திரிபால சேனநாயக்கா குழுவுடன் இணைந்திருப்பதும் தெரிந்ததே.

இத் தமிழ்அரசியல் பிரமுகர் நேற்று திரு. அனுரா பண்டாரநாயக்காவைச் சந்தித்து நீண்டநேரம் பேச்சு நடத்தினார்.

இதனைத்தொடர்ந்து நேற்றிரவு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இப்பேச்சு வார்த்தைகள் சுமுகமான சூழலில் நடைபெற்றதாகவும், திருப்ப...

6-ம் பக்கம் பார்க்க

★ இலங்கைத் தமிழ்மக்கள் பிரச்னை ★

# பிரதமர் இந்திராவிடம் எம்.ஜி.ஆர் மகஜர் கையளிப்பு

## கட்சித் தலைவர்களுடன் திங்கள் டில்லி புறப்படுவார்

சென்னை, டிச. 4

**இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகள் தொடர்பாக தமிழ்நாடு அனைத்துக் கட்சிகளின் மகஜர், நாளை மறுதினம் திங்கட்கிழமை பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடம் கையளிக்கப்படும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜீ. ராமச்சந்திரன் நேற்று சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.**

இது சம்பந்தமாக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன், பத்திரிகை நிருபர்களிடம் விபரமாகத் தெரிவித்தார்.

"இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகள்பற்றி ஆராய்வதற்காக தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் இன்று காலை அனைத்துக்கட்சிகளின் கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகள் தொடர்பான மகஜரொன்றை பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியிடம் இன்றைய கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் சென்று கையளிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது" என்று தெரிவித்த தமிழக முதல்வர், புதுடில்லி சென்று பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்ட பின்னரே அதிலுள்ள விபரங்கள் யாவும் வெளியிடப்படும்" என்றார்.

இதுதொடர்பாக இன்று நடைபெற்ற அனைத்துக்கட்சிகளின் கூட்டத்தில் இந்திரா காங்கிரசும், தி. மு. கவும் கலந்துகொள்ளவில்லை. (வெ)

## பாடப்புத்தகங்கள் குறைக்கப்படலாம்

(கொழும்பு)

மாணவர்களின் பாடப் புத்தகங்களையும் பாடநேரங்களையும் குறைப்பது குறித்து கல்வி அமைச்சு ஆலோசித்துவருகிறது.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா கொழும்பு ரோயல் கல்லூரியின் 145 வது வருடாந்த பரிசளிப்பு விழாவில் உரைநிகழ்த்துகையில் தாம் பெற்ற அறிவை நல்லமுறையில் பயன்படுத்தத் தெரிந்த ஒருவரே முழு மனிதனாகமுடியும் என்றும் திரு. ஜெயவர்த்தனா கூறினார். [இ]

## இன்று நடைபெறும் உபவேந்தர் தேர்தல்கள்

(கொழும்பு)

சர்வஜன வாக்குரிமைபெற்று 50 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. ஆனால் எமது பல்கலைக்கழகத்தவரோ, பல்கலைக்கழகத்தின் வாக்குரிமையை நன்கு பாவிக்கத்தெரியாதோராய் உள்ளனர்" என்று பல்கலைக்கழகக் கோர்ட்டில் பல வருடங்கள் சேவையாற்றிய சட்டத்தரணியொருவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் பதவிகளுக்கான தேர்தல் இன்று இலங்கையிலுள்ள ஆறு பல்கலைக்கழகங்களிலும் இடம் பெறுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைத் தவிர ஏனையவற்றிலுள்ள பல்கலைக்கழகங்களில் இத்தேர்தல் மிகவும் சூடுபிடித்துள்ளது. அரசாங்கத்தைச் சேர்ந்த வாகனங்களும் பிரசார அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. இதைவிட ஐ. தே. கவைச் சேர்ந்த இரு அபேட்சகர்கள் ஒருவரையொருவர் எதிர்த்துப போட்டியிடுகின்றனர். இவ்வாறு ஒரு தாறுமாறான நிலையே இத்தேர்தலில் தலைதூக்கியுள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ். பல்கலைக் கழகத்தில் மட்டும் அதிகளவு பரபரப்பின்றி, தேர்தல் நடைபெறுவதாகவும், போட்டியிடும் அபேட்சகர் ஒருவரை இருபெரும் கட்சிகள் கூட்டாக ஆதரிப்பதாகவும் அறியப்படு...

[6-ம் பக்கம் பார்க்க]

ஆனைக்கோட்டை, ஊரெழு கொள்ளைகள்:

## ஐந்து சந்தேக நபர்களும் அடையாளம் காணப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை, ஊரெழு கொள்ளைகள் சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களும் அடையாளம் காணப்பட்டனர்.

இவ் அடையாள அணிவகுப்பு யாழ். நீதிமன்றத்தில் பதில் நீதவான் ஏ அகரனி தலைமையில் நடைபெற்றது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த குரூபேல் தேவராசா என்பவர் வீட்டில் ரூ. 500 ரொக்கம் உட்பட 11,625 ரூபா பெறுமதியான தங்க நகைகளும், ஊரெழுவைச் சேர்ந்த எம். சற்குணநாதன் என்பவர் வீட்டில் ரொக்கம் 55,300 ரூபா பெறுமதியான தங் நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டதாக யாழ் பொலிசில் முறையிடப்பட்டிருந்தது.

இக்கொள்ளைகள் தொடர்பாக கிட்ணன் தேவராசா (கொக்குவில்) செ செல்வச்சந்திரன் (கோண்டாவில்). த பிரேமச்சந்திரன் (ஆனைக்கோட்டை), நாகேந்திரம் (இணுவில்) ஆகியோர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு. நேற்று அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டனர்.

அடையாளஅணிவகுப்புக்குப் பின்னர் யாழ் நீதிமன்ற நீதவான் ரி.போகநாதன் ஐவரையும் இம்மாதம் 7ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். (மா)

வெள்ள அகதிகளுக்கு

## உணவு உடைகள் வழங்குவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

"கிளிநொச்சியில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் அங்கு அரசாங்கக் காணிகளில் அத்துமீறி குடியேறிய 700 இந்திய வம்சாவழி குடும்பங்கள், வீடுகளை இழந்துள்ளன. இவர்கள் தொடர்ந்து விவசாயத்தில் ஈடுபட கனகபுரம், புதுமுறிப்பு 4-ம் கட்டையில் தற்காலிகமாகக் குடியேற்றப்பட்டு பின் முல்லைத்தீவு மாவட்டத்தில் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."

விவசாய அபிவிருத்தி பதில் அமைச்சர் திரு சந்திரா பண்டார நேற்றுக்கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது; கிளிநொச்சியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இந்திய வம்சாவழியினர்களில் இலங்கை பிரஜாவுரிமை பெற்றோர்களும், பிரஜாவுரிமை அற்றவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஏற்ற வசதிகள் செய்துகொடுக்கப்படும். இவர்களுக்கு வீடு கட்டுவதற்கு பொருட்களுக்கு 800 ரூபாவும், கூலியாக 200 ரூபாவும் வழங்கப்படும். சமூக சேவைப் பகுதி இதற்கான ஏற்பாடு செய்யும்.

வெள்ளத்தினால் கிளிநொச்சியில் ஒருபெரியவரும், இரு சிறுவரும், முல்லைத்தீவில் நாலு...

[6-ம் பக்கம் பார்க்க]

## அமரர் 'திரு வுக்கு இன்று அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

அமரர்கள் மு திருச்செல்வம், திருமதி புனிதம் திருச்செல்வம் ஆகியோரின் திருவுருவப்படத் திரைநீக்க விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி நகரசபைப் பொது நூலகத்தில் நடைபெறும்.

அமரர் மு திருச்செல்வத்தின் திருவுவப்படத்தினை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், அமரர் திருமதி புனிதம் திருச்செல்வத்தின் திருவுருவப்படத்தினை டீஷ் ஏ ஸ் குலேந்திரனும் திரைநீக்கம் செய்துவைப்பார்கள்.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு கி. க. யிக்வாகனம் தலைமையில் திருவுருவப்படத் திரைநீக்க விழா நடைபெறவிருக்கிறது.

நகரசபை செயலாளர் திரு. க நவரத்தினராசா வரவேற்புரைநிகழ்த்துவார்.

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு க. நடராசா த வி. கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்...

[6-ம் பக்கம் பார்க்க]

## ஐ. நா. செயலாளர் பதவி

# குர்த் வால்ட்ஹெய்ம் போட்டியிலிருந்து வாபஸ்

### சலீமும் விலகலாம்

நியூயோர்க் டிச 4

ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் பதவிக்கான போட்டியிலிருந்து டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் விலகிக் கொண்டார்.

ஐ. நா. பொதுச் செயலாளர் பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்வதில் இருந்து வந்த முட்டுக்கட்டை நீடித்து வருவதை அடுத்தே தாம் போட்டியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக டாக்டர் வால்ட்ஹெய்ம் பாதுகாப்புச் சபைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பொதுச் செயலாளர் தேர்தலில் நீடித்து வரும் முட்டுக்கட்டை நிலை தமக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது என்றும் தமது கடிதத்தில் தெரிவித்த டாக்டர் ஹெய்ம் மீண்டும் தாம் அப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் தாம் அப்பதவியை ஏற்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த அக்டோபர் முதல் 16 தடவைகள் இப்பதவிக்காக நடைபெற்ற வாக்கெடுப்பின் போது கடந்த 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து பொதுச் செயலாளராக இருந்து வரும் டாக்டர் கர்ட் ஹெய்முக்கு எதிராக சீனா தனது வாக்குத் தடுப்புத் (வீட்டோ) தடுப்பு உரிமையைப் பிரயோகித்து வந்ததும் அமெரிக்கா தன்சானிய வெளிநாட்ட மைச்சர் ஜனுப் அகமட் சலீமுக்கு எதிராக அமெரிக்கா தனது வாக்குத் தடுப்பு உரிமையைப் பிரயோகித்து வந்ததையும் தெரிந்ததே.

**சலீமும் விலகலாம்**

இது இவ்வாறிக்க தன்சானியப் பிரதிநிதியும் போட்டியிலிருந்து விலகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே சமயம் இவரைப் போட்டியிலிருந்து விலக வேண்டாம் என்று ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் கேட்டுக் கொள்ளவிருக்கின்றது. (இ)

## இந்திய கடற்படைத் தினம்

புதுடில்லி, டிச 4.

இந்தியாவில் இன்று கடற்படைத்தினம் கொண்டாடப்பட்டது. (இ)


உங்கள் பண முதலீட்டுக்கு

உறுதிமிகு பாதுகாவலும்
கவர்ச்சிமிகு தேட்டமும் தரும்
முதிர்ச்சிபெற்ற நம்பகமான
பணவிருத்தி ஸ்தாபனம்

30%

**தி சென்றல் ஃபினன்ஸ் கம்பெனி லிமிட்டெட்**

(ஒரு வரையறுக்கப்பட்ட பொது விதாபனம்.
5-ம் திகதி ஜூலை 1951-ல் பதிவு செய்யப்பட்டது.)

| காலவரை | தொகை | வருடாந்த வட்டி | | |
|---|---|---|---|---|
| | | மாதாந்தக் கொடுப்பனவு | வருடாந்தக் கொடுப்பனவு | முடிவுகாலக் கொடுப்பனவு |
| 2வருடங்கள் | ரூபா 500 முதல் 100,000 வரை | 22% | 25% | 27% |
| 2வருடங்கள் | 100,000 கும் அதற்கு மேலும் | 24% | 27% | 30% |

இயக்குனர்: சி. விஜயகுணயக்கா (சபாநாயகர்-நிர்வாக இயக்குனர்)
ஏ. எஸ். கருணாரத்ன, ஜே பி, சட்டத்தரணி.
ரி. ஏ. துனுவில, ஓ பீ ஈ, சட்டத்தரணி,
எம். சி. சங்சோனி, பீ. ஏ (இளைப்பாறிய பிரதம நீதியரசர்)
ரீ. எம் துனுவில, பீ ஏ, கர்னல் ஈ. ஜே டிவிதோட்டவெல,
கர்னல் ஏ ரீ. நுகவெல

முக்கிய வர்த்தகத்துறைகள்: பணக்கையாள்கை, காணி அபிவிருத்தி, இறக்குமதி பிரதிநிதித்துவம், விநியோகம்.

பொருளாதார நிலை பற்றிய தகவல்:-

| | 1977/78 | 1978/79 | 1979/80 |
|---|---|---|---|
| மூலதனம் | 1,522,500 | 1,522,500 | 1,522,500 |
| ஒதுக்கிய மூலதனம் | 3,107,970 | 7,030,225 | 8,742,785 |
| மூலதனமும் ஒதுக்கிய நிதியும் | 4,630,470 | 8,522,725 | 10,265,285 |
| வைப்பு முதல் | 27,684,075 | 29,952,100 | 33,671,700 |
| கடன் பெறு முதல் | 207,205 | 2,333,606 | 5,075,248 |
| மொத்த நிதியம் | 36,378,176 | 46,198,309 | 55,703,505 |
| லாபம் (வைப்பாளருக்கு வட்டி கட்டமுன்) | 6,642,954 | 8,075,252 | 9,411,865 |
| வைப்பாளருக்கு கட்டிய வட்டி | 3,746,107 | 4,814,736 | 5,8[illegible]2,417 |
| அசல் லாபம் (வரி கட்டுமுன்) | 2,896,847 | 3,260,516 | 3,529,448 |
| அசல் லாபம் (வரி கட்டிய பின்) | 1,786,805 | 1,775,842 | 2,135,945 |
| பங்கு லாபம் | 319,725 | 365,400 | 411,075 |
| பங்கு லாபம் | 21% | 24% | 27% |

**தி சென்றல் ஃபினன்ஸ் கம்பெனி லிமிட்டெட்**

தலைமை அலுவலகம்: 24, தலதா வீதி, கண்டி. போன்: 4098, 3818, 3076

நகர் அலுவலகம்: (நிர்வாகம் ஃபோர்ப்ஸ் அன் வாக்கர் லிமிட்டெட்) நம்பர் 221/5, தர்மபாலமாவத்த கொழும்பு-7, போன்: 93792

கிளை அலுவலகம்: 250, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 8360

ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்களாகப் பணவிருத்திப் பணி-பிறருக்காக


## 'தண்ணீர், தண்ணீர்'ல் ஆபாசம் இல்லை

### இப்படத்தைத் தடைசெய்யாதீர் மத்திய அரசுக்கு கோரிக்கை

புதுடில்லி, டிச. 4

பிரபல தென்னிந்திய தமிழ் திரைப்பட இயக்குநர் கே. பாலசந்தரின் "தண்ணீர் தண்ணீர்" திரைப்படத்திற்கு எக்காரணம் கொண்டும் தடைவிதிக்க வேண்டாம்.

இவ்வாறு தி. மு. க. எம். பி. திரு இரா. மோகன் இந்திய லோக்சபையில் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்.

"தண்ணீர் தண்ணீர்" திரைப்படத்தில் ஆபாச காட்சிகளோ, ஒழுக்கக் கேடான காட்சிகளோ கிடையாது. எனவே அப்படத்தைத் தடை செய்வது எவ்விதத்திலும் நியாயமில்லை என்றும் திரு. மோகன் தெரிவித்தார். (இ)

## 'விஞ்ஞானிகளை மிஞ்சிய சைவசமய ஞானிகள்'

(மட்டுவில்)



"இன்று விஞ்ஞானிகள் பல நவீன உபகரணங்களைக் கொண்டு கிரகநிலைகளை அறிந்து கொண்டு ஆய்வு செய்கிறார்கள். ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சைவசமய ஞானிகள், ரிஷிகள், வீட்டில் இருந்தபடியே கிரகநிலைகளைக் கண்டு அறிந்துரைத்தார்கள். இவர்கள் ஞானக்கண்ணைக் கொண்டு அறிந்து கூறியவையே இன்று சோதிடக்கலையாகப் போற்றப்படுகிறது"

இவ்வாறு மட்டுவில் திருக்கணித பஞ்சாங்க கணிதர் கோதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சி. இரத்தினக்குருக்களின் பஞ்சாங்கணிதத்தைப் பாராட்டி, இலங்கை சோதிட ஆய்வு மன்றத்தால் நடத்திய பாராட்டுக் கூட்டத்தில் பாராட்டுரை வழங்கிய அரியாலையூர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் கூறினார்.

நல்லை ஆதீனத்தில் இலங்கை சோதிட ஆய்வுமன்றத்தினால் எடுக்கப்பட்ட இந்தவிழாவுக்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சமஸ்கிருதமேதை பிரம்மஸ்ரீ நா. சுப்பிரமணிய ஐயர் தலைமை வகித்தார். மன்ற செயலாளர் திரு எஸ். சி. எஸ். இதயபாரதியின் வரவேற்புரையுடன் விழா ஆரம்பமானது. பாராட்டுக்களைத் தொடர்ந்து "திருமணத்திற்கு எண்ணிக்" என்ற பண்டிட் சே. என். நடராஜனின் நூலும் வெளியிடப்பட்டது சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் தொடர்ந்து கூறியதாவது:

"சோதிடக்கலை விதவாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்துள்ளது. இதன் மூலம் மக்கள் நல்வாழ்வுக்கு நமது முன்னோர் அன்றே வழிவகுத்திருந்துள்ளனர் ஆனால் அந்தக்கலையைப் புனிதமான கணிதத்தின் மூலம் அதன் புனிதத்தன்மை இழைக்காது பார்த்துக் கொள்வது சோதிடக் கலைஞரின் கடமையாகும் என்றார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் பேசுகையில்; சோதிடக்கலை உண்மையான ஒரு கலை அதிலும் விஞ்ஞானம் முதிர்ச்சியடைந்தும் தமிழ் நாட்டுச் சோதிடர்களைக் கண்டு பெருமைப்படுகிறார்கள்" என்றார்.

திரு ஐயா சச்சிதானந்தத்தின் நன்றியுரையுடன் விழா பூர்த்தியானது.

## இன்பருட்டி வாலிபர் மரணம் கொலை எனத் தீர்ப்பு

(புலோலி நிருபர்)

இன்பருட்டி வாலிபர் மகேந்திரராசமணியின் மரணம் கொலை எனப் பருத்தித்துறை பதில் நீதவான் தீர்ப்பளித்துள்ளார் இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்ட நபர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்

கடந்த மார்ச் மாதம் 11ம் திகதி கோடரியால் வெட்டப்பட்டு பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அல்வாய் வடக்கு இன்பருட்டியைச் சேர்ந்த நடனசிகாமணி மகேந்திரராசமணி (வயது 17) கடந்த 24ம் திகதி மரணமானார்.

இவரது மரண விசாரணையைப் பருத்தித்துறைப் பதில் நீதவான் திரு கே. வே பாலசுப்பிரமணியம் மேற்கொண்டார். பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு என் திருச்சிற்றம்பலம் சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

இறந்தவரின் சகோதரிக்கும் சந்தேக நபரான இராஜரத்தினம் என்பவருக்கும் இடையே ஏற்பட்ட வாய்ப்பேச்சினால் இறந்தவருக்கும் சந்தேக நபருக்கும் மோதல் ஏற்பட்டதாகவும், சம்பவ நேரம் வீட்டினுள் இருந்த இறந்தவரைச் சந்தேக நபர் வீட்டிற்கு வெளியே நின்று கூப்பிட்டதாகவும், இறந்தவர் வெளியே சந்தேக நபர் கையிலிருந்த கோடரியால் இறந்தவரை வெட்டிய போது இறந்தவர் கீழே விழுந்து விட்டதாகவும், இறந்தவரின் முதுகில் கோடரி வெட்டுப்பட்டபடியே இருந்ததாகவும் பின்னர் கோடரியை இறந்தவரின் சகோதரி அவரது முதுகிலிருந்து நீக்கியதாகவும், பின்னர் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், நோய் குணமடையாததனால் இறந்தவர் குமாரி ஒருமாத காலத்திற்கு முன்னர் இறந்தவர் வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டதாகவும், பின்னர் அவர் இறந்துவிட்டதாகவும் விசாரணையின் போது தெரிய வந்தது.

மந்திகை ஆஸ்பத்திரி வைத்தியசாலை டாக்டர் கே. லலிதகுமார் பிரேதபரிசோதனை செய்தார்.

ஏற்கனவே மகேந்திரராசமணியைக் கொலைசெய்ய முயன்றார் எனக் கொலை முயற்சிக் குற்றஞ்சாட்டி ராஜரத்தினம் மீது எதிராகத் தாக்கல் செய்திருந்த வழக்குப் பருத்தித்துறை நீதவான் திரு கே. எஸ் மகேசன் முன்னிலையில் கூப்பிடப்பட்டபோது பிணையில் விடப்பட்டிருந்த ராஜரத்தினம் ஆஜராகி இருந்தார். சந்தேக நபரான ராஜரத்தினம் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

( )

## அக்டோபர்...

2ம் பக்கத்தொடர்ச்சி

வைத்திலிங்கம். திரு. எம். ஏரம்பமூர்த்தி திருமதி பத்மா சிவகுருநாதன், முன்னாள் எம். பி. திரு எம். இ. சுப்பிரமணி யம் ஆகியோர் உரை நிகழ்த்துவர். (மா)

## ஆண்டுவிழா

(கொழும்பு)

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழா இன்று சனிக்கிழமை சங்கமண்டபத்தில் நடைபெறும்.


## சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்
### துறைமுகம்-காரைநகர்
# ஏல விற்பனை

யந்திரமயமான பாவித்த மீன்பிடிப்படகு கட்டுக் பைபர் கிளாஸ் கோக்ஸ் மற்றும் மீன்பிடி யந்திர உதிரிப்பாகங்கள்:

மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள் 13-12-81 காலை 9-30 மணிக்குப் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

இப்பொருட்களைப் பெறவிரும்புவோர் 07-12-81-க்கு மேல் நேரடியாகப் பார்வையிடலாம், பொருட்களின் விபரங்கள் வர்த்தக அதிகாரியுடைய பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விற்பனையில் பெறப்பட்ட பொருட்கள் யாவற்றிற்கும் முழுத்தொகையையும் செலுத்துவதோடு அன்றைய தினமே பி. ப. 4-00 மணிக்குமுன் பொருட்களை எடுத்துச்செல்லவேண்டும். இந்நிபந்தனைகளுக்கமைய விற்பனவுமூலம் பொருட்களைப் பெற்றபின் எந்தவித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது, ஏல விற்பனைமூலம் பொருட்களைப் பெற்றவர் அன்றையதினமே பொருட்களை எடுத்துச்செல்லாதுவிடின் மீண்டும் விற்பனவுசெய்யப்படுவதோடு அப்பணம் திருப்பித்தரப்படமாட்டாது.

### விற்பனைக்கு உள்ள பொருட்கள்

1. கண்ணாடி இழை மீன்பிடி வள்ளம், அச்சு அளவு:- 17 1/2", 18 1/2", 21', 25', 28', 46".
2. மரம் அரியும், சீவும் மின் இயந்திரங்கள்.
3. கடைச்சல் இயந்திரம்.
4. மீன்பிடி வள்ள இயந்திரங்கள் யன்மார் 25 எம் பெட்டர்
5. நீர் இறைக்கும் இயந்திரம்
6. 2500 கலன் கொள்ளக்கூடிய உருக்கு டீசல் தாங்கி
7. இரும்பு ஓட்டும் இயந்திரம்
8. "வோக்" இயந்திரம், உதிரிப்பாகங்கள்.

நிர்வாக இயக்குநர்
சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்,

3-12-81. 1641



## ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
# உல்லாச பஸ் சேவை

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

யாழ் - கொழும்பு: செவ்வாய், வியாழன், ஞாயிறு

கொழும்பு - யாழ்: திங்கள், புதன், வெள்ளி.

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

[1] ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
இல 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

[2] யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,
தொலைபேசி இல: 7596.

[3] குயிக் ரிரவல்ஸ் அன்ட் ரூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச்லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல: 273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்

ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல. 105, ஒக்கொட் மாவத்தை, புறக்கோட்டை,
தொலைபேசி இல. 22830

ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
இல. 157/2, ஸ்ரீ இரேசன் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி இல 23277

நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி
தொலைபேசி இல: 88866

கட்டணம் ரூபா 65-00


## விற்பனவுவரி அறவிடப்படமாட்டாது

(கொழும்பு)

அரிசி, மா, பாண் ஆகியவற்றிற்கு வியாபார மொத்த விற்பனவு வரி அறவிடப்படமாட்டாதென அரசாங்கம் அறிவித்துள்ளது. (வெ)

## இந்திய ஜனாதிபதியின் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இந்திய ஜனாதிபதி திரு நீலம் சஞ்சீவரெட்டி அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வர்த்தக, கப்பல் துறை அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்தார். (வெ)

## அமரர்--

1ம் பக்கத் தொடர்ச்சி

பரம், யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன், திரு. கு. நேசையா, சாவகச்சேரி எம். பி. திரு வ. நவரத்தினம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அம்பிரம், திரு. எஸ். கே. இரவியநாயகம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

கலாநிதி நீலன் திருச்செல்வம் பதிலுரையும், நகரசபை உறுப்பினர் திரு. இ. சதாசிவம் நன்றியுரையும் நிழ்த்துவர். (மா)

## சுதந்திரக்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மொன்று ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்பட்டதாகவும் குறிப்பிட்ட தமிழ்ப் பிரமுகருடன் தொடர்புள்ள வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

இத் தமிழ்ப் பிரமுகரின் முயற்சி நல்ல பலனை அளித்திருப்பதாகவும் மேற்படி வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. (ம)

## உணவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்களும், ஒரு பெண்ணும் இறந்துள்ளார்கள். கிளிநொச்சியில் 17 முகாம்களில் 1500 குடும்பங்களைச் சேர்ந்த 7050 பேர் இருக்கின்றனர்.

இவர்களில் 800 குடும்பங்கள் குடியேற்றத் திட்டத்தை சேர்ந்தவர்கள். இவர்கள், நிலைமை சீரானதும், குடியேற்றத்திட்டத்திற்கு சென்றுவிடுவார்கள்.

"மற்றும் 700 இந்திய குடும்பங்களை வேறு இடங்களில் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். கிளிநொச்சியில் அரசாங்க காணிகள் இல்லாததினால், நிலைமை சீரானதும், இவர்கள் முல்லைத்தீவில் குடியேற்றப்படுவார்கள்.

"கிளிநொச்சிமுகாமிலுள்ளவர்களுக்கு தினமும் 45,000 ரூபா செலவில் உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு நபருக்கு தினம் ரூபா 3-50 சதமே சமூகசேவைப் பகுதியினர் வழங்கினர். உதவி அரசாங்க அதிபரின் வேண்டுகோளப்படி தற்போது ஒருவருக்குத் தினம் 7 ரூபா வழங்கப்படுகிறது. இரண்டு நாட்களுக்குமட்டும் வழங்கப்பட்டுவந்த நிவாரணம் 7 நாட்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் 19 முகாம்களில் 15,000 அகதிகள் இருக்கின்றனர். பங்கீட்டு உணவு இலவசமாக வழங்கப்படும்.

"முல்லைத்தீவு புதிய அரசாங்க அதிபர் திரு ஞானச்சந்திரன் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட சமயம் கடமையை ஏற்றுள்ள போதிலும். திறமையாக வெள்ள நிவாரண வேலைகளைக் கவனித்து நிலைமையை உணர்ந்து உடன் நடவடிக்கைகளை எடுத்தார். (ம)

## இப்படியும் நடக்கிறது

டிக்லியிலுள்ள குர்த்பத்நார் என்னுமிடத்திலுள்ள வரலாற்றுப்புகழ்மிக்க ஒரு நினைவுச்சின்னத்தைப் பார்வையிட நேற்றுமுன்தினமிரவு பெருந்திரளான மக்கள் சென்றிருந்தனர்.

மாடிப்படிகள் வழியாக மக்கள் வேகமாகப் போய்க் கொண்டிருக்கையில் திடீரென மின் விளக்குகள் அணைந்து விட்டன.

மிகுதியை நான் கூறவேண்டிய அவசியமில்லை!
சனநெரிசலில் நாற்பத்து ஐந்துபேர் மாண்டனர்,

— ஊடுருவி

## 'அமிர்' யோசனைக்கு பிரதி அமைச்சர் வரவேற்பு

(கொழும்பு)

"சிறுபான்மை சமூகத்தவர்களுக்கும் உதவி அரசாங்க அதிபர் பதவி வழங்க வேண்டும். இதன்மூலம் சாதிப் பிரச்னையை ஒழிக்கலாம்" என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு அ அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை பிரதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு பேர்ஸி சமரவீர ஆதரித்து உரையாற்றினார்.

சாதிப்பிரச்னை தொடர்ந்து நீடிக்கிறது" என்று குறிப்பிட்ட பிரதி அமைச்சர் வடக்கில் நிலவும் சாதிக்கொடுமையை நீக்க திரு அமிர்தலிங்கம் தெரிவித்த யோசனையை தாம் வரவேற்பதாகக் கூறினார். (ம)

## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது)

## இன்று...

1-ம் பக்கத்தொடர்ச்சி]

கின்றது.

இத்தேர்தல்கள் பற்றி அபிப்பிராயம் தெரிவித்திருக்கும் கலாநிதியொருவர் ஒரு கட்சிக்குள்ளேயே கருத்துவேறுபாடுகள் நிலவுவதைக் காண முடிகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கோட்டில் மாணவர் மன்றத்திற்கும் அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ள போதிலும், குறிப்பிடத்தக்க சில வளாகங்களில் மாணவர் மன்றத்தேர்தல்கள் நடைபெறவில்லையாம். பல்கலைக்கழகக் கோட்டே மேற்படி துணைவேந்தர், மாணவர் மன்றத் தேர்தல்களை நடத்தும் உரிமை பெற்றது. பல்கலைக்கழக வேந்தர்கள் சிலரது தலையீட்டாலேயே மேற்படி மாணவர் மன்றத் தேர்தல் நடைபெறவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு

(கொழும்பு)

தோட்டத்தொழிலாளருக்கு ஜனவரி மாதத்திலிருந்து நாட் சம்பளம், 2 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. தற்போது ஒரு ஆண் தோட்டத்தொழிலாளி நாட்சம்பளமாக 14ரூபா முதல் 16 ரூபாவும், பெண் தோட்டத் தொழிலாளி ஒருவர் 12 ரூபா முதல் 14 ரூபாவும் பெற்றுவருகின்றனர்.

இந்த நாட்சம்பள அதிகரிப்பால் 5 லட்சம்தோட்டத் தொழிலாளர்கள் நன்மையடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வெ)

## றீகனை கொலைசெய்யத் திட்டம்

வாஷிங்டன், டிச 4

லிபியாவில் பயிற்சிபெற்ற ஐந்து பயங்கரவாதிகள் அமெரிக்க ஜனாதிபதி திரு றூகனைக் றீகனை கொலைசெய்யும் திட்டத்துடன் அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது,

அமெரிக்க ஜனாதிபதி திரு றீகன் பயணம் செய்யும் ஜெட்விமானத்தை ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தவும், அவர் பிரயாணம் செய்யும் ஆடம்பரக்காரை தகர்க்கவும் இவர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கா முழுவதும் பாதுகாப்பு அதிகாரிகள் தீவிர தேடுதல் வேட்டையில ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (வெ)


## மரண அறிவித்தல்
### ஆர். சி. தெய்வேந்திரம்

இளைப்பாறிய தபாலதிபர் ஆர் சி. தெய்வேந்திரம் காலமாகிவிட்டார். இவர் செல்வநாயகியின் அன்புக் கணவரும் ரவீந்திரன் (குடிவரவு குடியகல்வு அதிகாரி), இந்திரநீலா. டாக்டர் இந்திரபாலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலிங்கம் (பொறியியலாளர், யூ. கே.) அவர்களின் சகோதரரும், கணநாதன் (மத்திய தந்திக் கந்தோர்), தயாநாயகா (கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு), லலினி ஆகியோரின் மாமனாரும், நிர்மலா, நந்தி, சுகந்தி (யாழ், இந்து மகளிர் கல்லூரி), உமசங்கர் (யாழ். இந்துக் கல்லூரி), மேனகா, இந்திரநீலி, உமாமினி, மதுரங்கா, குமரன், ஹம்சினி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை 5-12-81 காலை 10 மணிக்கு 203, நாவலர் வீதி இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

1640


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803-ம் இலக்கத்திலுள்ள கலாநிலை அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் 5ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper. The General P. O. Sri Lanka Regd.Q. B. 100886/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 883, 8186.